**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:22.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## பட்டயப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை 2026–2027
## நேரடி மாணவர் சேர்க்கை ( Spot Admission )

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், உறுப்பு மற்றும் இணைப்புக் பட்டயப்படிப்பு கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கான நேரடி மாணவர் சேர்க்கை (Spot Admission) 25.09.2026 அன்று காலை 9.00 மணியளவில் கோயமுத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அண்ணா அரங்கத்தில் நடைபெற உள்ளது.

**நேரடி மாணவர் சேர்க்கை (Spot Admission) நடைபெறும் விதம் :**

நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கலந்தாய்விற்குரிய குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூரில் நேரிடையாக வந்து கலந்து கொள்ள வேண்டும்.

**நேரடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ள நிபந்தனைகள்:**

- நேரடி மாணவர் சேர்க்கையில் இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்களிடமிருந்து மட்டுமே கலந்தாய்வு கட்டணம் பெறப்படும் மற்றும்
- நேரடி மாணவர் சேர்க்கைக்கு நகர்வு முறை (Sliding System) கிடையாது.

**நேரடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ளலாம்?**

- பட்டயப்படிப்பிற்கான கலந்தாய்வில் ஏற்கனவே கலந்து கொள்ளதாவர்கள்

- கலந்தாய்வில் இடம் கிடைக்கப் பெற்று சான்றிதழ் சரிபார்ப்பினை தவறவிட்டவர்கள் மற்றும்
- சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டு கல்லூரியில் சேராதவர்கள் கலந்து கொள்ளலாம்.

**நேரடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ள கூடாது?**

- பொதுக் கலந்தாய்வில் இடம் பெற்று ஏற்கனவே சேர்க்கை பெற்றவர்கள் மற்றும்
- பொதுக் கலந்தாய்வில் இடம் பெற்று, பின்னர் இடைநிறுத்தம் (Discontinued) செய்தவர்கள்

**நேரடி மாணவர் சேர்க்கைக்குரிய கட்டணம்:**

- பட்டயப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ளும் மாணவர்கள், கல்லூரியை தேர்வு செய்யும் முன் கலந்தாய்வு கட்டணம் செலுத்த தேவையில்லை. கலந்தாய்வில் இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் SC / SCA/ ST பிரிவு ரூபாய். 100/- மற்றும் இதர பிரிவினர் ரூபாய். 200/- செலுத்த வேண்டும்.

**நேரடி மாணவர் சேர்க்கை நடைபெறும் நாளன்று பின்பற்ற வேண்டியவை,**

- நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் வளாகத்திற்கு வர வேண்டும்.
- நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொண்ட மாணவர்களின் வருகைப் பதிவேடு குறிக்கப்பட்டு, தரவரிசை நிர்ணயிக்கப்படும்.
- நேரடி மாணவர் சேர்க்கையின் போது இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட சேர்க்கை கட்டணமான ரூபாய்.5,000/- செலுத்தி உடனடியாக கல்லூரியில் சேரலாம், பணம் கட்டுவதற்கான வசதி பல்கலைக்கழக வளாகத்திலேயே செய்யப்பட்டு இருக்கும்.

நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் அளிக்க இயலாது.

நேரடி மாணவர் சேர்க்கை குறித்த விவரங்களை அறிய விரும்பும் மாணவர்கள் 94886 35077, 94864 25076 என்ற அலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் முகவரியை அணுகலாம்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***